ஏனாதி கிராமத்தில் மின் கம்பங்கள்.

459—(*வினா எண். 13691) திரு. க. பாரமலை: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பசும்பொன் மாவட்டம்—மானாமதுரை வட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், ஏனாதி கிராமத்தில் இருபதுக்கும் மேற்பட்ட மின்கம்பங்கள் இற்றுப்போய் கீழே விழும் நிலையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்தக் கம்பங்களுக்குப் பதிலாக புதிய மின்கம்பங்கள் நட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஒரே ஒரு சிமின்ட் மின் கம்பம் மட்டும் பழுது அடைந்து இருந்ததாக கண்டுபிடிக்கப் பட்டது.

(ஆ) மேற்படி பழுதான சிமின்ட் மின் கம்பம் 25—3—1987 அன்று மாற்றப்பட்டுவிட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) மதுரை மாவட்டம் சின்னமனூரிலுள்ள வெற்றிலைக் கொடிக்கால்களுக்கு தண்ணீர் விடுதல் குறித்து.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, மதுரை மாவட்டம் சின்னமனூர் கருக்கன்காட்டுக்குளம் பகுதியைச் சேர்ந்த வெற்றிலைக் கொடிக்கால் விவசாயிகள்

1987 ஏப்ரல் 22] [திரு. கே. சுப்பராயன்]

தங்கள் கொடிக்கால் விவசாயத்திற்கு தண்ணீர் விடக் கோரி, 27 ஆம் தேதி அனைத்துக் கட்சிகள் சார்பாக ஒரு பஸ் மறியல் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். அது குறித்து அரசினுடைய நிலை என்ன? அவர்களுக்குத் தண்ணீர் விடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதே பிரச்சினையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வே. இரா. ஜெயராமன் அவர்களும், திரு. எ. எஸ். எ. ஆறுமுகம் அவர்களும் கேட்டிருக்கிறார்கள். சேர்த்தே பதில் சொல்லிவிடலாம். (குறுக்கீடு) அதே தந்திதான். 3 பேருக்கும் அதே தந்திதான் கொடுத்திருக்கிறார்கள். படிக்க வேண்டாம். (குறுக்கீடு) அதை ஏன் மீண்டும் படிக்க வேண்டும்? படித்ததாகக் கருதப்பட்டு, பத்திரிகையில் வரும்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கோரிக்கையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். பெரியார் பகுதியாக இருந்தாலும் சரி, வைகைப் பகுதியாக இருந்தாலும் சரி, இப்போது குடிநீருக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்ற உணர்வை அதிகாரிகளுக்குச் சொல்லியிருக்கிறோம். ஆனால் இப்படிப்பட்ட கோரிக்கையை இன்றைக்குச் சொல்லியிருக்கிறார்கள். அதிகாரிகளுடன் கலந்து பேசி, இதற்கு உதவ முடியும் என்று அதிகாரிகள் சொல்வார்களானால், அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) அரசு நிகழ்ச்சிகளிலே உறுப்பினர்கள் பங்குபெற வாய்ப்பளிப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. துரை கிருஷ்ணமூர்த்தி, திரு. மா. மீனாட்சிசுந்தரம் ஆகியோர் ஒரே பிரச்சினை பற்றிக் கேட்டிருக்கிறார்கள் திரு. துரை கிருஷ்ணமூர்த்தி . . .